ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1656/38 - 2010 ජූනි 03 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.06.03

*1656/38 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் (திருத்தப்பட்டவாறான) நியதிச் சட்டம்*

### அறிவித்தல்

மேல் மாகாணத்தின் முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார ஊக்குவிப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், மேல் மாகாண மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் (திருத்தப்பட்டவாறான) நியதிச் சட்டத்திற்கான மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநரின் கட்டளைப்படி 2009, சனவரி 28 ஆந் திகதி தொடக்கம் இது மேல் மாகாணத்தின் மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் (திருத்தப்பட்டவாறான) நியதிச் சட்டமாக நடைமுறைக்கு வரும் என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,
முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும்
ஒழுங்கும், காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண
நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும்
வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார ஊக்குவிப்பு
தொடர்பான அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

கொழும்பு,
2009, யூலை 29.

***மேல் மாகாணம்***

***2009 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் திருத்த நியதிச் சட்டம்***

*மேல் மாகாணத்தின் 2007 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை நியதிச்சட்டத்தினை திருத்துவதற்கான நியதிச்சட்டமொன்றாகும்*

*இந்நியதிச் சட்டம் மேல் மாகாணத்தின் 2009 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபையின் திருத்த நியதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் ஆளுநரின் அங்கீகாரத்தைப் பெற்ற தினத்தன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாணத்தின் மாகாண சபையால் பின்வருமாறு நிறைவேற்றப்படுவதாக.*

*1. 2007 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை நியதிச்சட்டத்தின் 10(3) உப பிரிவுக்குப்பின் 10(4) எனும் கீழ்க் காட்டப்பட்டுள்ள உப பிரிவு உள்ளடக்கப்பட்டு இப்பிரிவு இவ்வாறு திருத்தப்பட்டுள்ளது.*

*10(4) இந்நிதிக்கு உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் உடனடிக் குற்றப்பணம் சேவைக்கட்டணமாக கிடைக்கப்பெறும் வரவு பணத்தில் 50 சதவீதத்தை அவ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அவர்களது நிர்வாக எல்லைக்குள் உள்ள நிலையான கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்களுக்காக பயன்படுத்த முடியும் என்பதுடன் மிகுதிப்பணத்தில் 40 சதவீதத்தை அவ் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய கழிவு முகாமைத்துவ வலயங்களில் நடைமுறைப்படுத்தப்படும் தெரிவுசெய்யப்பட்ட பொது கருத்திட்டங்களுக்காக பயன்படுத்த முடியும்.*

*2. நியதிச் சட்டத்தின் 2007 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாண கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகார சபை நியதிச் சட்டத்தில் 15(1) பிரிவு கீழ்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.*

*15(1). கழிவுப்பொருள்கள் பொது அல்லது பிரத்தியேக பாதைகளில் நீர்த்தேக்கங்கள், வாய்க்கால்கள், கரையோரங்கள், ஆறுகள், நதிகள், குளங்கள், களப்புகள் அல்லது கடற்கரையோரத்தை அண்மித்த பொது இடங்களில் எறிதல் அல்லது பிரத்தியேக இடங்களில் எறிதல் தவறு என்பதுடன், அத்தவறு சம்பந்தமாக நீதிவான் நீதிமன்றங்களின் முன்னிலையில் தவறு இழைக்கப்பட்டவராக கருதப்படும்போது 1ஆவது அட்டவணையின் 2ஆவது நிரலில் கூறப்பட்ட கழிவுப்பொருள் திரள்வுகளின் மூலவளங்களின் தன்மைகளுக்கமைய அதற்கு பொருந்தும் அவ் அட்டவணையின் 3ஆவது நிரலில் கூறப்பட்ட அளவுக்கு குறைந்த 4ஆவது நிரலில் கூறப்பட்ட அளவுக்கு மேலாகாத சிறைத்தண்டனையும் அல்லது இவை இரண்டினையும் அல்லது குற்றத்திற்கு ஆளாதல் வேண்டும்.*

*6-379*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.